**தலைப்பு 2 – பிரதம அமைச்சர் அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 22 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்டோபர் 29 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பிரதம அமைச்சர் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பிரதம அமைச்சர் அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் இரண்டு மூலதன விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 44,500,000 ஆன ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தது. | கருத்து வழங்கப்படவில்லை. | வருடாந்த மதிப்பீடு முடிந்த வரையில் யதார்த்தமாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரிக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரமாகக் காட்டப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | | |
| அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| அரச நிதிச் சுற்றறிக்கை 02/2020 ஆம் இலக்கத்தின் 10:1 ஆம் பந்தியின் பிரகாரம் அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 06. | (அ) திணைக்களத்தின் புத்தகத்தின் பிரகாரம் வருமானமல்லாப் பெறுவனவுகள் ரூபா 11,570,319 என்பதுடன் அத்தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 99,570 ஆகக் காட்டப்பட்டமையால் தேறிய காசுப் பாய்ச்சலில் ரூபா 11,470,749 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | காசாகப் பெறப்படுகின்றவை மட்டுமே காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களப் புத்தகத்தின் பிரகாரம் வேறு செலவுத் தலைப்புக்களுக்காக செலவிடப்பட்ட செலவுகள் ரூபா 5,373,182 என்பதுடன் அத் தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 4,739,183 ஆகக் காட்டப்பட்டுள்ளமையால் தேறிய காசுப்பாய்ச்சலில் ரூபா 633,999 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | திணைக்களப் புத்தகத்தின் பிரகாரம் தனிப்பட்ட சம்பளம் மற்றும் செயற்பாட்டுச் செலவுகளுக்காகச் செலவிடப்பட்ட செலவுகள் ரூபா 827,475,393 என்பதுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 809,627,577 ஆக ரூபா 17,847,816 ஆனது குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | திணைக்களப் புத்தகத்தின் பிரகாரம் வைப்புக் கொடுப்பனவுகள் மற்றும் வைப்புப் பெறுவனவுகள் முறையே ரூபா 12,429,740 மற்றும் ரூபா 12,608,604 என்பதுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 11,822,540 மற்றும் வைப்புப் பெறுவனவுகள் ரூபா 11,873,427 ஆகவும் காட்டப்பட்டிருந்தமைய | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | ால் முறையே காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 607,206 ஆல் குறைவாகவும் மற்றும் காசு உட்பாய்ச்சல் ரூபா 735,177 ஆல் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தன. | | |
| (உ) | வருடத்தில் பௌதீகச் சொத்துக்கள் நிர்மாணிப்பதற்குச் செலவிடப்பட்ட செலவுகள் ரூபா 67,439,583 என்பதுடன் அத்தொகை காசுப்பாய்ச்சலில் ரூபா 65,514,746 ஆகக் காட்டப்பட்டமையால் தேறிய காசுப் பாய்ச்சலில் ரூபா 1,924,837 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | திணைக்களப் புத்தகத்தின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 37,646,754 என்பதுடன் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 10,065,985 ஆக காட்டப்பட்டமையால் தேறிய காசுப் பாய்ச்சலில் ரூபா 27,040,769 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | திணைக்களப் புத்தகத்தின் பிரகாரம் முற்பண அறவீடுகள் ரூபா 36,435,255 என்பதுடன் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 586,554 ஆகக் காட்டப்பட்டமையில் தேறிய காசுப்பாய்ச்சலில் ரூபா 35,848,701 ஆன வேறுபாடொன்று அவதானிக்ககப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயல் நடவடிக்கைத் திட்டம்.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| PFD/REFD/01/04/2014/01 ஆம் இலக்க மற்றும் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டிற்கானவை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்படல் வேண்டும். எனினும் 2020 வருடத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட வருடத்திற்கான நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையாற்றுகின்ற பதவியணி தொடர்பான விபரங்கள், வருடாந்த பெறுகைத் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் போன்றன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அத் திட்டங்கள் இணைக்கப்பட்டு ஒரு செயல் நடவடிக்கைத் திட்டமாக தயாரிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | குறிப்பிட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நல்லிணக்கப்பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நல்லிணக்கப் பொறி முறைகளுக்கான ஒருங்கிணைப்புச் செயலகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்றமொன்று அவதானிக்கப்படவில்லை. | 2020 மார்ச் 31 ஆந் திகதிய நல்லிணக்கப் பொறிமுறைகள் ஒருங்கிணைப்புச் செயலகத்தின் பணிகள் நிறைவடைந்துள்ளமையால் அதற்கான முன்னேற்றமொன்று சமர்ப்பிக்கப்படுவதற்கு முடியவில்லை. | 2020 ஆம் வருடத்திலேயே 03 மாதங்கள் செயற்பட்டு அவ் வருடத்திலேயே அதன் பணிகள் நிறைவடைந்துள்ளமையால் அதன் முன்னேற்றத்தைக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 192 அதாவது அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் நூற்றுக்கு 30 வீதம் என்பதுடன் அதில் இரண்டாம் மட்டத்தில் வெற்றிடங்கள் 81 ஆகும். | பெரும்பாலானோரின் பாதுகாப்பு அனுமதி அறிக்கைகளைப் பெற வேண்டியிருந்தமை, நாட்டில் நிலவிய பாதகமான சுகாதார நிலைமைகள் காரணமாக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதில் காலதாமதமொன்று ஏற்பட்டது. | பதவியணியினரின் வெற்றிடங்கள் காணப்படுகின்றமை திணைக்களத்தின் செயற்திறனைப் பாதிக்குமானால் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் அல்லது அவ்வாறு இல்லாதிருந்தால் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையைத் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |